**NATIONAL INSTITUTE FOR EMPOWERMENT OF PERSONS WITH MULTIPLE DISABILITIES (Divyangjan)**
(Dept. Of Empowerment of Persons with Disabilities (Divyangjan),
Ministry of Social Justice & Empowerment, Govt. of India)
Muttukadu, East Coast Road, Kovalam (P.O), Chennai - 603 112
Tamil Nadu – India. Phone: 044 – 27472046, 27472104, 27472113, 27472423

NIEPMD / DRA.37(5)/020 /

18th May,2021

CIRCULAR

It has been reported that some staff have been restricted by the police to attend to duty at various points while coming to NIEPMD. In this connection it is clarified that a press information has been released which is enclosed herewith. As per the press release the staff attending office may kindly show the ID card and pass issued by NIEPMD , Office.

Should there be any problem the numbers in the press release may be contacted.

This is issues with the approval of the Competent Authority.

A. [signature]

(Dr. A. Amarnath)
DR(Offg.)

To

All the staff

Encl: Press release.

NIEPMD * Chennai - 603 112 * NIEPMD

செய்தி வெளியீடு எண்.80/05/2021

**பத்திரிகைச் செய்தி – 18.05.2021**

**கொரோனா தொற்று பரவலை தடுக்கும் பொருட்டு தமிழக அரசு சில தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு அமல்படுத்தியுள்ளது. சென்னை பெருநகரில் காவல் நிலைய சரகங்களிலிருந்து மற்றொரு செக்டார் பகுதிக்கு செல்வதற்கு இ–பதிவு அவசியமாக்கப்பட்டது.**

**மருத்துவர்கள், சுகாதார துறையினர், பத்திரிகை ஊடகத்துறையினர், அத்தியாவசிய பணியாளர்கள், மத்திய மாநில அரசு பணியாளர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள், தூதரக அதிகாரிகள் மற்றும் வழக்குறைஞர்கள் ஆகியோர் செல்வதற்கு அடையாள அட்டை போதுமானது என சென்னை பெருநகர காவல்துறை அறிவிப்பு**

கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு, தமிழக அரசால் 10.5.2021 முதல் 24.5.2021 வரையில் சில தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. அதன்பேரில், **சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.சங்கர் ஜிவால், இ.கா.ப., அவர்கள்** உத்தரவின்பேரில், சென்னை பெருநகரில் சோதனைச்சாவடிகள் அமைத்து, சரக காவல் குழுவினர்கள் மூலம் தடையை மீறி அத்தியாவசியமின்றி வாகனங்களில் சுற்றுபவர்கள், ஒன்று கூடுபவர்கள், முகக்கவசம் அணியாமல் செல்பவர்கள், சமூக இடைவெளி கடைபிடிக்காதவர்கள் மற்றும் தமிழக அரசின் கொரோனா வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடிக்காதவர்களை கண்காணித்து உரிய சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்பேரில், கூடுதல் ஆணையாளர்கள் (வடக்கு, தெற்கு, போக்குவரத்து) அறிவுரையின்பேரில், இணை ஆணையாளர்கள், துணை ஆணையாளர்கள் மேற்பார்வையில், **சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து காவல் சார்பில் சென்னை நகர் முழுவதும்**, காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் அடங்கிய காவல் குழுவினர் மூலம் வாகனத் தணிக்கை, சுற்று ரோந்து மூலம் தீவிரமாக கண்காணித்து கொரோனா தடுப்பு ஊரடங்கு விதிமுறைகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. சில இடங்களில் அரசால் அனுமதிக்கப்பட்ட அத்தியாவசிய பணி நிமித்தமான மருத்துவம், சுகாதாரம், மத்திய

சென்னை பெருநகர காவல் ஆணையாளர், அறிவுரையின்படி தமிழக அரசால் ஊரடங்கில் அனுமதி வழங்கப்பட்ட **மருத்துவர்கள், சுகாதார துறையினர், பத்திரிகை ஊடகத்துறையினர், அத்தியாவசிய பணியாளர்கள், மத்திய மாநில அரசு பணியாளர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள், தூதரக அதிகாரிகள் மற்றும் வழக்குறைஞர்கள்** பணி நிமித்தமாக செல்லும்போது, வாகனத் தணிக்கை இடங்களில் அடையாள அட்டையுடன் செல்ல அனுமதிக்கப்படுவர். இவர்களுக்கு **இ–பதிவு தேவையில்லை.** மேலும், அனுமதிக்கப்படுகின்ற மேற்கண்ட துறையினர் அனைவரும் தங்களது அடையள அட்டையை எளிதில் பார்க்கும் வண்னம் வெளிபடுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முக்கிய சாலைகளில் அத்தியாவசிய பொருட்கள் எடுத்து செல்லும் வாகனங்கள் **Ambulance வாகனங்கள் செல்வதற்கு பிரத்தியேகமாக தனி வழி** எற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அனுமதிக்ப்படும் மேற்கண்ட துறையினர் மற்றும் அவர்களது வாகனங்கள் தடுக்கப்பட்டு அனுமதிக்க மறுக்கப்படும நிலையில் தொடர்புக்கு சென்னை பெருநகர மக்கள் தொடர்பு உதவி ஆணையாளர் தொலைபேசி எண் 23452320 மற்றும் 9498130011 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

சென்னை பெருநகரில் **இன்று (18.05.2021) மாலை 06.00 மணி வரை** சென்னை பெருநகர காவல் குழுவினர் மேற்கொண்ட தணிக்கை மற்றும் சோதனையில், **சட்டம் ஒழுங்கு** மற்றும் **போக்குவரத்து காவல் குழுவினரால்** சென்னை பெருநகரில் **கொரோனா ஊரடங்கு தடையை மீறியது** தொடர்பாக **3,315 வழக்குகள்** பதிவு செய்யப்பட்டு, அத்தியாவசிய தேவையின்றி வெளியில் சுற்றியது தொடர்பாக **4,107 வாகனங்கள்** பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், **முகக்கவசம் அணியாமல்** சென்றது தொடர்பாக **3,044 வழக்குகளும், சமூக இடைவெளி கடைபிடிக்காதது** தொடர்பாக **345 வழக்குகளும், பதிவு செய்யப்பட்டுள்ளது.**

பொதுமக்கள் தமிழக அரசின் ஊரடங்கு வழிகாட்டுதல் நெறிமுறைகளை கடைபிடித்து கொரோனா தொற்றை தடுக்க சென்னை பெருநகர காவல்துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.